திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# “நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு” கழக ஆட்சியின் சாதனை விளக்க தொடர் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு மக்கள் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்ற வகையில் “எல்லோர்க்கும் எல்லாம்” என்ற திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி, நாடே பார்த்து வியக்கும் வகையில் 4 ஆண்டுகளில் ஈடில்லா சாதனைகளை படைத்து இந்தியாவின் நம்பர் 1. முதல்வர் என்ற வரலாற்று சரித்திரத்தை படைத்து, நல்லாட்சி நடத்தி வரும் “மக்களின் முதல்வர்” நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று தமிழ் இனத்திற்காகவும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களுக்காகவும் ஆற்றிய அரும் பெரும் சாதனைகளை மக்களுக்கு விளக்கிடும் வகையில்

“நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு” என்ற தலைப்பில் திருப்பத்தூர் மாவட்டத்தில் மே 08-ஆம் தேதி முதல் மே 13-ஆம் தேதி வரை பொதுக் கூட்டங்களை கீழ்க்கண்ட ஒன்றிய - நகர கழகங்களில் கீழ்க்கண்ட தேதிகளில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி சிறப்பு பேச்சாளர்களைக்கொண்டு நடத்தப்பட உள்ளது.

| வ.எண் | தேதி | பேச்சாளர் | இடம் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|---|
| 1 | 08.05.2025 வியாழக்கிழமை | கவிஞர் ஆ.தே.முருகையன் 9597366607 | பள்ளிக்குப்பம் குடியாத்தம் வடகிழக்கு ஒன்றியம் 9894240440 |
| 2 | | சாவல்பூண்டி மா.சுந்தரேசன் 9443685882 | நரியனேரி கந்திலி மேற்கு ஒன்றியம் 9443506093 |
| 3 | | ஏ.பாலமுருகன் 9360779757 | ஆண்டியப்பனுர் திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் 9994266057 |
| 4 | | லயோலா த.ராஜசேகர் 9786553177 | கெஜல்நாயக்கன்பட்டி கந்திலி தெற்கு ஒன்றியம் 9944655165 |
| 5 | 09.05.2025 வெள்ளிக்கிழமை | மலர் மு.கருணாநிதி 9444021151 | அரங்கல்துருகம் மாதனூர் மேற்கு ஒன்றியம் 9443007498 |
| 6 | | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ் 9717154177 | குப்பம்பட்டு அணைக்கட்டு தெற்கு ஒன்றியம் 8012979240 |
| 7 | | தக்கோலம் ந.தேவபாலன் 9994242872 | கோட்டைத் தெரு திருப்பத்தூர் நகரம் 9443626100 |
| 8 | | ஆற்காடு அகிலன் 9444268424 | கொத்தூர் நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் |
| | | | 9443203776 |
| 9 | 10.05.2025 சனிக்கிழமை | ஏ.பாலமுருகன் 9360779757 | கீழ்முருகை மாதனூர் கிழக்கு ஒன்றியம் 9487105186 |
| 10 | | கவிஞர் ஆ.தே.முருகையன் 9597366607 | காக்கனாம்பாளையம் திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் 9894830020 |
| 11 | | சாவல்பூண்டி மா.சுந்தரேசன் 9443685882 | தும்பேரி நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் 8489875553 |
| 12 | | லயோலா த.ராஜசேகர் 9786553177 | புத்துக்கோயில் ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் 9600973415 |
| 13 | 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ் 9717154177 | மதனாஞ்சேரி ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் 9500115875 |
| 14 | | போஸ்.வெங்கட் 9841879232 | விசமங்கலம் கந்திலி கிழக்கு ஒன்றியம் 9944187646 |
| 15 | | ந.தேவபாலன் வி.வேல்முருகன் | நிம்மியம்பட்டு ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் 9751555700 |
| 16 | | ஆற்காடு அகிலன் 9444268424 | மூக்கனூர் ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் 9865754298 |
| 17 | 12.05.2025 திங்கட்கிழமை | கவிஞர் ஆ.தே.முருகையன் 9597366607 | பன்னீர்செல்வம் நகர் ஆம்பூர் நகரம் 9894379440 |
| 18 | | ஏ.பாலமுருகன் 9360779757 | செவ்வாத்தூர் கந்திலி மத்தியம் ஒன்றியம் 9443227059 |
| 19 | | லயோலா த.ராஜசேகர் 9786553177 | ஜின்னா சர்க்கில் வாணியம்பாடி நகரம் 9443229828 |
| 20 | 13.05.2025 செவ்வாய்க்கிழமை | சாவல்பூண்டி மா.சுந்தரேசன் 9443685882 | பக்கிரிதக்கா ஜோலார்பேட்டை மத்தியம் ஒன்றியம் 9487490754 |
| 21 | | உ.சீனிவாசன் 9943828899 | குடியானகுப்பம் ஜோலார்பேட்டை நகரம் 9443099197 |

எனவே, அந்தந்த ஒன்றிய - நகர கழகச் செயலாளர்கள், மேற்கண்ட தேதிகளில் நடைபெறும் தொடர் பொதுக்கூட்டங்களை மற்றும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு, அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர்களில் அடங்கி உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் தந்து, அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து மிகவும் சிறப்பான முறையில் இக்கூட்டங்களை ஏற்பாடு செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**க.தேவராஜி எம்.எல்.ஏ.**
செயலாளர் - திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், வடமலம்பட்டி தரப்பு, புளியம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில், வருவாய்த்துறை சார்பாக பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் ஆகியோர் வழங்கினார்கள். உடன் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான் உள்ளிட்ட அரசு துறை அதிகாரிகள் உள்ளனர்.




திருவாரூர் சார்பில் ஒன்றியச் செயலாளர் புலிவலம் ஏ.தேவா மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் வேலங்குடி கலைஞர் திடலில் நடைபெற்ற “நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு” பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர், மாநில விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் உ.மதிவாணன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தொகுதி தேர்தல் பொறுப்பாளர் எஸ்.கே.வேதரத்தினம், புத்தகலூர் ஜோதி, தலைமைக் கழக இளம் பேச்சாளர்கள் அ.தீன்ஷா நூப், ஜெ.தினேஷ்பாபு மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

“நாடுபோற்றும் நான்காண்டு - தொடரட்டும் இது பல்லாண்டு”

# திருவாரூர் மாவட்டத்தில் முதற்கட்ட பொதுக்கூட்டங்கள்!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. சாதனைத் தொகுப்புகளை வழங்கினார்!

திருவாரூர், மே. 10 -

தலைமைக்கழக அறிவிப்பின்படி, திருவாரூர் மாவட்டத்தில் “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு” பொதுக்கூட்டங்கள் எழுச்சியோடு நடைபெற்றது .

மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. கூட்டங்களில் பங்கேற்று பேசி திராவிட மாடல் அரசின் சாதனை தொகுப்பு புத்தகங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

திருவாரூர் ஒன்றியத்தின் சார்பில் ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ.தேவா மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் வேலங்குடியில் கலைஞர் திடலில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் உ.மதிவாணன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தொகுதி தேர்தல் பொறுப்பாளர் எஸ்.கே.வேதரத்தினம் புத்தகலூர் ஜோதி, தலைமைக்கழக இளம் பேச்சாளர்கள் அ.தீன்ஷா நூப், ஜெ.தினேஷ்பாபு மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

கூத்தாநல்லூர் நகர கழகம் சார்பில் நகர செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் நாகை சாகுல் ஹமீது, தேர்தல் பொறுப்பாளர் எஸ்.கே.வேதரத்தினம் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

கோட்டூர் வடக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல் மற்றும் நிர்வாகிகளின் ஏற்பாட்டில் திருநெல்லிக்கவல் கலைஞர் அரங்கில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் ஆரூர் மணிவண்ணன், இளம் பேச்சாளர் இரா.பிரீத்தீ மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

நீடாமங்கலம் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் வடுவூர் தேரடி திடலில் ஒன்றியக் கழகச் செயலாளர் நா.கவியரசு மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜ மாணிக்கம், தலைமைக்கழகப் பேச்சாளர் ஏ.சிவா என்கிற சிவகுமார் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினர்.

குடவாசல் தெற்கு ஒன்றியகழகத்தின் சார்பில் ஒன்றியக் கழகச் செயலாளர் ப.பிரபாகரன் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் கூந்தலூரில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக் கூட்ட த்தில் தலைமைக் கழக பேச்சாளர் பாடகர் ஜக்கரியா, தலைமைக் கழகப் பேச்சாளர் தங்க. குணசேகரன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்று பேசினார்.

இந்த கூட்டங்களில் பங்கேற்ற மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., கழக அரசின் பொற்கால சாதனைகளை விளக்கி பேசியதுடன், கழக அரசின் சாதனைப் பட்டியல்கள் அடங்கிய புத்தகத்தை பொதுமக்களிடம் வழங்கினார்.

மேலும் கூட்டங்களில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் வார்டு கிளைக்கழக நிர்வாகிகள், பெருந்திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

பெரம்பலூர் மாவட்டம்! மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்

# பா.துரைசாமி தாயார் பா.ந.அஞ்சலையம்மாள் மறைவு!

## வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. - கழக நிர்வாகிகள் அஞ்சலி!

பெரம்பலூர், மே 10 -

பெரம்பலூர் மாவட்டம், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர், வரகூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் , முன்னாள் மாவட்ட கழகச் செயலாளருமான பா.துரைசாமி தாயாரும், மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் தலைவர் கொடியரசி துரைசாமி மாமியாருமான, பா.ந.அஞ்சலையம்மாள் வயது (87), நேற்று முன்தினம் (8.5.2025 - வியாழக்கிழமை) உடல் நலக்குறைவால் மறைவெய்தினார்.

வேப்பூர் வடக்கு ஒன்றியம், பெண்ணக்கோணம் கிராமத்தில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த உடலுக்கு, பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

நேற்று (09.05.2025) மதியம், பெண்ணக்கோணம் கிராமத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வை. மகாவிஷ்ணு

மே 10 (2007)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருவொற்றியூர் நகரத்தில் தொடர்ந்து முப்பதாண்டுகள் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1987 இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், 1991 ரயில் மறியல் போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**